# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 21, 2021 Weekly E-paper • August 21, 2021


# ஆப்கானிஸ்தான்

எழில். இளங்கோவன்





## இதுதான் உண்மையான "மன் கி பாத்"

-சுப. வீரபாண்டியன்

## அனைத்துச் சாதி அர்ச்சகர்

வா.ரங்கநாதன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 21, 2021 Weekly E-paper • August 21, 2021


# ஆப்கானிஸ்தான்

**- எழில். இளங்கோவன்**



மேற்கில் ஈரான், வடக்கில் உஸ்பெகிஸ்தான், துருக்மினிஸ்தான், தஜகஸ்தான் ஆகிய நாடுகளுடன், கிழக்கில் இருந்து தெற்கு வரையும் பாக்கிஸ்தானை எல்லை நாடுகளாகக் கொண்டிருக்கும் இயற்கை வளமிக்க நாடு - ஆப்கானிஸ்தான். அதற்கு நெடிய வரலாறு இருக்கிறது. அதற்குள் நாம் போக வேண்டாம், இன்றைய நிலையில் அந்நாட்டைச் சற்று உற்றுப்பார்ப்போம்.

1973ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானின் மன்னராக இருந்தவர் சாஃகிர் ஷா. அவரை அவரின் மைத்துனர் சர்தார் தாவுத் அதே ஆண்டில் ஆட்சியைக் கவிழ்த்து அரசரானார். அடுத்த ஐந்தாவது ஆண்டில் அதாவது 1978ஆம் ஆண்டில் அந்நாட்டின் இடதுசாரிக் கட்சியான "ஆப்கானிஸ்தான் மக்கள் ஜனநாயகக் கட்சி" அன்றைய மன்னர் சர்தார் தாவுத்தைக் குடும்பத்துடன் கொலை செய்து, ஆட்சியைக் கைப்பற்றியது. இது இடதுசாரிக் கட்சி என்பதனால் சோவியத் ரஷ்யா அதற்கு ஆதரவாக ஆப்கானிஸ்தானத்தில் தன் படையை இறக்கியது. அன்றையக் காலத்தில் சோவியத்தும், அமெரிக்காவும் நேர் எதிரான வல்லாதிக்க நாடுகளாக இருந்தன.

அன்று அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஜிம்மி கார்ட்டர், அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புத்துறை ஆலோசகர் சிக்னிவ் பிரசின்கியின் ஆலோசனையை ஏற்று, பாக்கிஸ்தானின் ஐ.எஸ். ஐ. மூலம் அங்குள்ள முஜாகிதீன்களுக்கு ஆயுதம், பண உதவிகளைச் செய்தார். இதனால் ஆப்கனின் இடதுசாரிகளுக்கு எதிராக முஜாகிதீன்கள் போராட்டம் கடுமையாக மாறியது.

விளைவு ? அடுத்த பத்து ஆண்டுகளில், 1989ஆம் ஆண்டு சோவியத்தில் ஒரு லட்சம் படைவீரர்கள் ஆப்கானை விட்டு வெளியேறினார்கள். சோவியத் படை வெளியேற்றத்தை அடுத்து அமெரிக்கா ஆப்கனுக்கான ஆயுத, பண உதவிகளை நிறுத்திக் கொண்டது. இதனால் அமெரிக்காவிடம் ஆத்திரம் கொண்டு, ஆட்சியைப் பிடித்த முஜாகிதீன் அமைப்புகளிடையே இருந்து இரண்டு மத அடிப்படைவாத அமைப்புகள் உருவாயின. அவை 1. தாலிபான், 2.அல்கொய்தா.

முஜாகிதீனுக்குப் பின் 1996 முதல் 2001 வரை தாலிபான்களின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் ஆப்கானிஸ்தான் வந்தது. தாலிபான்கள் இஸ்லாமிய சரியத் சட்டங்களின் கீழ் ஆட்சி செய்வதாகச் சொன்னார்கள். அந்த ஆட்சி ஒரு கொடுமையான, குறிப்பாக ஆப்கானியப் பெண்களின் மீது அடக்கு முறையும், ஒடுக்குமுறையும் செலுத்தி, எல்லை மீறியதாக இருந்தது.

பெண் குழந்தைகள் உள்பட எந்தப் பெண்ணாக இருந்தாலும் வீட்டுக்குள்தான் அடைந்து இருக்க வேண்டும். ஆண் துணையுடன் மட்டுமே அவர்கள் வெளியே வர வேண்டும். அனைத்துப் பெண்களும் "பர்தா"வைக் கொண்டு உடல் முழுவதையும் மூடிக் கொண்டு வர வேண்டும். 12 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டு, பள்ளிகள் இழுத்துப் பூட்டப்பட்டன. இளம்பெண்களைத் தாலிபான்கள் கட்டாயத்திருமணம் செய்தனர், செய்ய வற்புறுத்தினர். இவைகளில் எதையாவது மீறும் பெண்கள் பொதுவெளியில் கசையடி, அல்லது மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். மொத்தத்தில் பெண்கள் அடிமைகள் ஆக்கப்பட்டனர். இதேபோல ஆண்களுக்குக் கட்டாயம் தாடி வளர்ப்பது உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகள் இருந்தன.

இந்நிலையில் பின்லேடன் தலைமையிலான அல் கொய்தா 11-09-2001 அன்று அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களை இரண்டு விமானங்கள் மூலம் இடித்துத் தகர்த்தது. வாஷிங்டன் டி. சி. அருகில் உள்ள பென்டகன் அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தியது. இதனால் அதிர்ந்து போன அன்றைய குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஸ், அக்டோபர் இறுதியில் தாலிபான், அல்கொய்தாவுக்கு எதிராக அமெரிக்கப் படைகளை ஆப்கனில் இறக்கினார். தாலிபான்கள் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் அமெரிக்கப் படைகளை திரும்பப் பெற்றது அந்நாடு. தாலிபான்கள் ஆப்கனில் நுழையத் தொடங்கினார்கள்.

தொடர்ச்சி மறுபக்கம்

# இதுதான் உண்மையான "மன் கி பாத்"

**-சுப. வீரபாண்டியன்**

கடந்த ஆகஸ்ட் 15 அன்று உச்ச நீதிமன்றத்தில் தேசியக் கொடியை ஏற்றியபின் உரையாற்றிய தலைமை நீதிபதி என்.வி.ரமணா, "இந்திய நாடாளுமன்றத்தில் விவாதங்களும் நடைபெறவில்லை, ஜனநாயகமும் இல்லை" என்று பேசியிருக்கிறார். இதுதான் "உண்மையான மன் கி பாத்" என்று முரசொலியில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் மிகச் சரியானது.



நீதிபதி கொடியேற்றிவிட்டு நீதிமன்றத்திற்குள் உள்ளே சென்றிருக்கலாம். அதுதான் வழக்கமானதும் கூட. ஆனால் இம்முறை, நீதிமன்றத்திற்கு வெளியில் அவர் ஓர் சிற்றுரை ஆற்றியுள்ளார். அதில்தான் மேற்காணும் வரிகளைக் குறிப்பிடுகின்றார். ஓர் உச்சநீதி மன்றத்தின் நீதிபதி இவ்வளவு வெளிப்படையாகத் தன் உள்ளக்குமுறலை எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைக்கு நம் நாடு வந்துவிட்டது என்பது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

இந்தச் சூழலில்தான் நேற்று, காணொலி வாயிலாக 19 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து கலந்துரையாடியுள்ளனர். காங்கிரஸ், திமுக, திரிணாமுல் கட்சி, பொதுவுடைமைக் கட்சிகள், தேசியக் காங்கிரஸ், சிவசேனா என்று பல்வேறு கட்சிகள் உரையாடலில் இணைந்துள்ளன. தமிழ்நாடு, மேற்கு வங்கம்,மகாராஷ்டிரம், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களின் முதலமைச்சர்களும் அதில் பங்கேற்றுள்ளனர்.

அந்தக் கலந்துரையாடலில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப் போக்கை எதிர்ப்பதற்காகவே எதிர்க்கட்சிகள் கூடிப் பேசியுள்ளன. என்றாலும், மக்களுக்கான தடுப்பூசி தொடர்பானத் தீர்மானமே முதல் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. மூன்று வேளாண் சட்டங்களும் திரும்பப் பெறப்பட வேண்டும், பெகாசஸ் தொடர்பாக விசாரிப்பதற்கு நீதிமன்ற ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்பன போன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முதலாளித்துவம் தனக்கானப் புதை குழியைத் தானே தோண்டிக்கொள்ளும் என்பார் மார்க்ஸ். பாசிசமும் அதே வழியில்தான் பயணம் செய்யும். பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடந்த எதிர்க்கட்சிகளை ஆளும் கட்சியின் பாசிசம் இன்று ஒன்று சேர்த்திருக்கிறது.

இந்தக் கூட்டணி பிரியாதிருக்க வேண்டும் என்பதோடு, தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கவும் வேண்டும். ஏற்கனவே பிரதமர் மோடியின் செல்வாக்கு குறைந்து கொண்டே இருக்கிறது. சில நாள்களுக்கு முன், இந்தியா டுடே வெளியிட்ட கருத்துக் கணிப்பில். சென்ற ஆண்டு 66% ஆக இருந்த பிரதமரின் செல்வாக்கு இந்த ஆண்டு அதே ஆகஸ்ட் மாதத்தில் 24% ஆகக் குறைந்துள்ளது என்று கூறுகின்றது. இது ஓர் இமாலயச் சரிவு!

இந்தச் சரிவிற்கு என்ன காரணம்? பண வீக்கம், விலைவாசி உயர்வு ஆகியனவற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கலே பெரும்பபான்மை மக்களின் மனமாற்றத்திற்குக் காரணமாக உள்ளது என்கிறது இந்தியா டுடே. இதனைத் தாண்டி, ஒன்றிய அரசு மற்றும் ஆளும் கட்சியின் சர்வாதிகாரப் போக்கை, பாசிசத் தன்மையை மக்களிடம் மேலும் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். அண்மையில், கான்பூரில், "ஜெய் ஸ்ரீ ராம்" என்று கூறத் தயங்கிய ஒரு இஸ்லாமியப் பெரியவரையும் அவருடைய மகளான ஒரு சிறுமியையும் அடித்து இழுத்துக் கொண்டு போகும் காட்சி காணொலிகள் எங்கும் பரவியதைப் பார்த்தோம். இந்த நிலை இனியும் தொடரக் கூடாது.

எல்லாவற்றையும் எதிர்க்கட்சிகள் பார்த்துக் கொள்வார்கள் என்று மக்கள் இருந்துவிடக் கூடாது. மக்கள் விழிப்புற்று எழ வேண்டும். அதற்கு அனைத்துச் ஜனநாயகச் சக்திகளும் தங்களால் இயன்றவற்றைச் செய்திடல் வேண்டும்! ●

---

## முன்பக்கத் தொடர்ச்சி...

அதனால் அந்நாட்டின் அதிபர் அஸ்ரப் கனி நாட்டை விட்டு வெளியேறினார். தாலிபான்கள் மிக விரைவில் தலைநகர் காபூலைக் கைப்பற்றினார்கள்.

தாலிபான்கள் ஆட்சியைக் கண்டு அந்நாட்டு மக்கள் பதறினார்கள், துடித்தார்கள்; அவர்களின் முந்தைய அடிப்படைவாத அடக்கு முறையை எண்ணி.

நாட்டை விட்டு வெளியேற பல்லாயிரக் கண்கானோர் முயல்கின்றனர். பெண்களோ வாழ்வா, சாவா என்ற அச்சத்தில் இருக்கிறார்கள்.

இந்நிலையில் தாலிபான்கள் முன்பு போலில்லாமல் இம்முறை பெண்களின் கல்வி, வேலைவாய்ப்புகளில் சுதந்திரம் தருவோம் என்று உறுதி கூறினார்கள். ஆனாலும் அந்த உறுதியைக் காற்றில் பறக்க விடுவது போல், ஜலாலாபாத் மக்கள் மீது தாக்குதல், கந்தகாரில் பெண்கள் வேலைக்குப் போவதைத் துப்பாக்கி முனையில் தடுத்தல், ஹராத் நகரில் மாணவர்கள் மீதான தாக்குதல் என்று அடுத்த 24 மணி நேரத்தில் தாலிபானின் அடக்கு முறையை, "லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்" என்ற இதழ் உலகுக்கு வெளிப்படுத்தியது. எனவே தாலிபான்களின் உறுதி மொழிகளை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ளவோ, நம்பவோ முடியாது. இனி வரும் காலங்களில் இந்த ஆட்சி



ஷரியத் சட்டத்தின் படிதான் நடக்கும். ஒருபோதும் ஜனநாகத்திற்க்கு இடம் இல்லை என்று தலிபான்கள் வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள்.

இந்நிலையில் பாக்கிஸ்தான், ஆப்கானை அங்கீகரித்து உள்ளது. சீனா அங்கீகரிக்கத் தயாராகி விட்டது. ஈரானும், ரஷ்யாவும் ஏறத்தாழ அதே நிலைக்கு வந்துவிட்டன.

வளைகுடாவில் கோஹா என்ற இடத்தில் லஷ்கர்-இ-தொய்பாவுக்கு அரசியல் அலுவலகம் இருக்கிறது. அதன் மூலம் இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் தாலிபான்களிடம் பேசி வருவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் சொல்கின்றன.

ஆப்கானில் அதிக அளவில் கிடைப்பதாகச் சொல்லப்படும் "காப்பர்"(செம்பு) போன்ற கனிம வளங்களுக்காகவும், அங்கு கிடைக்க இருப்பதாகச் சொல்லும் எண்ணெய் வளங்களுக்காகவும் பல்லாயிரங் கோடிகளில் சீனா முதலீட்டு ஒப்பந்தம் செய்து இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தியா கடந்த காலங்களில் மின் உற்பத்தி, அணை கட்டுவது, அந்நாட்டு நாடாளுமன்றம் கட்டுதல் என்று ரூ.25,000 கோடிகளுக்கு மேல் ஆப்கனில் முதலீடு செய்துள்ளது. இப்பொழுது அங்குள்ள அரசியல் சூழலில் இந்தியா என்ன நிலை எடுக்கப் போகிறது என்பது போகப் போகத்தான் தெரியும்.

பாக்கிஸ்தான் ஆப்கானிஸ்தானத்துடன் நெருக்கமாக இருக்கும் நாடு என்பதுடன், சீனாவுடனும் நட்பு பாராட்டுகிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

ஆப்பானிஸ்தானமாக இருந்தாலும் சரி, பாக்கிஸ்தானாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி, மத அடிப்படைவாத சித்தாந்தத்தைக் கொள்கையாக நடைமுறைப் படுத்தினால் அங்கே அமைதியும், நிம்மதியும் இருக்காது.

அதற்கு உதாரணம் இன்றைய ஆப்கானிஸ்தான் ! ●

# பாலினச் சமத்துவம்

"செப்டம்பர் 5ஆம் தேதி நடக்கவிருக்கும் தேசியப் பாதுகாப்பு அகாடமி தேர்வில் பெண்கள் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்" என உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள், "ஆண்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கும் மத்திய அரசின் இந்தக் கொள்கை முடிவு, பாலினச் சமத்துவத்திற்கு எதிரானது. இது மத்திய ஆட்சியாளர்களின் மனநிலைப் பிரச்சினையாகும். பெண் அதிகாரிகள் தங்களது சக ஆண் அதிகாரிகளுக்கு இணையாகப் பணிபுரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. **பெண்களின் உடலியல் அம்சங்களுக்கும் அவர்களின் உரிமைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை."** என்று தெரிவித்துள்ளனர்.

உச்சநீதிமன்றத்தின் இக்கருத்துகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை!

இரண்டாம் ஆண்டில்
திராவிடப்பள்ளி
நிறுவனர்: சுப. வீரபாண்டியன்
மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது
www.dravidapalli.com
விண்ணப்பிக்க கடைசி நாள் 31-08-2021
தலைமை ஒருங்கிணைப்பாளர்
மா. உமாபதி
தொடர்புக்கு:
95437 13558

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதாதேவி


தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தொலைபேசி: 044-2472 6408

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

# கொடநாடும் "பதற்றமும்"



டெஹல்கா புலனாய்வு ஆசிரியர் மேத்யூ சாமுவேல் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசியபோது, அதிமுகவினரின் ஊழல் குறித்த ஒப்புதல் வாக்குமூல ஆவணங்களைக் கொடநாடு மாளிகையில் ஜெயலலிதா வைத்திருந்தார், அதைக் கைப்பற்ற எடப்பாடி நினைத்தார் என்று சொல்லியிருந்தார்.

அன்று தமிழக முதல்வர் எடப்பாடிதான்.

அப்போது உடன் இருந்த, குற்றவாளியாகக் கருதப்படும் சயான், ஜெயலலிதாவிடம் ஓட்டுநராக இருந்த கனகராஜ் (அந்த) முக்கிய ஆவணங்களை எடுக்க தன்னை அழைத்ததாகவும் இதன் பின்னணியில் இருந்தவர் எடப்பாடி என்றும் சொல்லியிருக்கிறார்.

இது தொடர்பாக ஐவர் மரணம் அடைந்து இருக்கிறார்கள்.

காவலர் ஓம்பகதூர் வாயில் துணி அடைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அவருடன் வேலை பார்த்த கிருஷ்ண பகதூர் காயங்களுடன் கண்டெடுக்கப் பட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் கார் ஓட்டுனராக இருந்த கனகராஜ் கார் விபத்தில் இறந்துள்ளார்.

சயானும் அவரின் மகளும், மனைவியும் கேரளாவில் ஒரு கார் விபத்தில் இறந்து விட்டார்கள். சயான் மட்டும் இன்று சாட்சியாக இருக்கிறார்.

குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் வாக்குமூலம் முக்கியத்துவம் பெறுகிறது.

எடப்பாடி ஆட்சியின் இந்த வழக்கு இப்பொழுது சரியாக விசாரிக்கபடும்போது, எடப்பாடி ஏன் துடிக்கிறார்?

ஆளுநரிடம் ஏன் ஓடுகிறார்?

ஏன் பயப்படுகிறார்?

எடப்பாடியின் இந்தப் பதற்றமே இவரின் மீது ஐயத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

உண்மைக் குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும்.

அதற்கு எடப்பாடி இந்த வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

அது அவரின் கடமை !

# அனைத்துச் சாதி அர்ச்சகர் பணி நியமனம்!

**வா.ரங்கநாதன்,** தலைவர்
அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் – தமிழ்நாடு.

தமிழக சமூகநீதி வரலாற்றில் ஒரு மைல் கல் - ஈராயிரம் ஆண்டுகளாக நீடித்த கருவறைத் தீண்டாமை இருள் அகற்றப்பட்டது!

அனைத்துச் சாதி அர்ச்சகர் பணி நியமனம்! அரசியல் சட்ட ரீதியான சமத்துவத்தை நிலைநாட்டி, தனி மனித மாண்பை மீட்டெடுத்து, தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய தமிழக அரசுக்கு நன்றி!




தந்தை பெரியார் அவர்கள் 1969-ல் கருவறை நுழைவுப் போராட்டம் அறிவிக்க, அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து பரம்பரை வழி அர்ச்சகர் முறையை ஒழித்தார். உச்சநீதிமன்றத்தில் தடை பெற்ற பழைய அர்ச்சக பிராமணர்கள் சட்டத்தை அமல்படுத்த விடாமல் தடுத்தனர். மீண்டும் 2006-ல் அனைத்துச் சாதி அர்ச்சகர் சட்டத்தை திரு.கலைஞர் அவர்கள் இயற்றியதுடன், அதை அமல்படுத்த தமிழகத்தில் சைவ வைணவப் பயிற்சிப் பள்ளிகளை திறந்து, இட ஒதுக்கீடு அடிப்படையில் 207 மாணவர்களை அதில் சேர்த்து இளநிலை அர்ச்சகராகப் பயிற்சி கொடுத்து அதற்கான தீட்சையும் சான்றிதழும் மாணவர்கள் பெற்றனர்.

உடனே, மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஆதிசைவ சிவாச்சாரியர்கள் உச்சநீதிமன்றம் சென்று அனைத்துச் சாதி அர்ச்சகர் சட்டத்திற்குத் தடை உத்தரவு பெற்றனர். மாணவர்கள் சான்றிதழ் கூடப் பெற முடியவில்லை. அப்போது சிதம்பரம் நடராஜர் கோயிலில் தமிழில் தேவாரம்-திருவாசகம் பாடப் பல்வேறு போராட்டங்களை முன் எடுத்த மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய வழக்கறிஞர்கள் விருத்தாசலம் ராஜீ, மதுரை வாஞ்சிநாதன், சென்னை ஜிம்ராஜ் மில்டன் உள்ளிட்டோர் வீடு வீடாகச் சென்று மாணவர்களை அணுகி அனைத்துச் சாதி அர்ச்சக மாணவர் சங்கத்தை உருவாக்கி மதுரை, சென்னை, திருச்சி, விருத்தாச்சலம் உள்ளிட்டப் பல்வேறு இடங்களில் பலரை இணைத்து ஆகமம் பெரிதா? அரசியல் சட்டம் பெரிதா? எனப் போராட்டம் நடத்தினர். மீனாட்சி அம்மன் கோவில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தினோம். பெரியார் சிலை முன்பு நடத்திய போராட்டத்திற்காக மதுரை நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி விடுதலை பெற்றோம். போராட்டத்தின் உச்சமாக வா.ரங்கநாதன் தீட்சையைத் துறந்து எதிர்ப்பைப் பதிவு செய்தார். இதனால் ஆர் எஸ் எஸ், பாஜக, இந்து முன்னணியினர் ரங்கநாதனைத் தாக்கினர். இன்றுவரை மிரட்டுகின்றனர். எல்லாவற்றையும் தாண்டி உச்சநீதிமன்ற வழக்கில் அர்ச்சக மாணவர்கள் சார்பில் இணைந்தோம். வழக்கை மூத்த வழக்கறிஞர்களை வைத்து நடத்தினோம்.

இதற்கான சட்டரீதியான உழைப்பை மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தினரும், பல லட்ச ரூபாய் நிதி மற்றும் மக்கள் பிரச்சாரம், நூல் வெளியீடு, போராட்டம், கருத்தரங்கம் உள்ளிட்ட ஆதரவை தோழர் திரு.மருதையன், திரு. காளியப்பன், மக்கள் பாடகர் கோவன் தலைமையிலான மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் (ம.க.இ.க.) செய்தனர். இதற்கு முழு ஆதரவாக தி.க. தலைவர் அய்யா வீரமணி, முன்னாள் அமைச்சர் வி.வி.சுவாமி நாதன், அய்யா சத்தியவேல் முருகனார், கிருபானந்த சாமி ஆகியோர் இருந்தனர்.

தொடர் சட்டப் போராட்டங்கள், மக்கள் போராட்டங்களைக் கடந்து இன்று அர்ச்சகர் மாணவர்கள் 24 பேருக்கு ஆகமக் கோயில்கள், பாடல் பெற்ற தலங்கள் உள்ளிட்டப் பல்வேறு கோவில்களில் முதல் கட்டமாக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தந்தை பெரியார் சமூக நீதிப் போராட்டம் அறிவித்த நாளான ஆகஸ்ட்,14 , 2021இல் மயிலைக் கபாலீஸ்வரர்கோவில் மண்டபத்தில் குன்றக்குடி அடிகளார், பேரூர் அடிகளார் முன்னிலையில், அரசு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற , பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்பட 24 பேரை அர்ச்சகர்களாக நியமித்து ஆணை வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்த வரலாற்று நிகழ்வை சாத்தியமாக்க, கருவறைத் தீண்டாமையை ஒழிக்க, அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம் தொடர்ந்து நடத்திய சட்டப் போராட்டம், மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்த அனைவருக்கும் இந்த சமயத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

உச்சநீதிமன்றத்தின் சேசம்மாள் வழக்கு, ஆதித்தன் வழக்கு, மதுரை ஆதிசைவ சிவாச்சாரியார்கள் வழக்கு, சபரிமலை வழக்கு எனப் பல தீர்ப்புகள் அர்ச்சகர் நியமனத்தோடு தொடர்புடையவை. மீண்டும் சில தீர்ப்புகளைக் காட்டி ஆகமங்கள், பழக்கவழக்க மரபுகள் மீறப்பட்டுள்ளன என்று ஆதிக்கவெறி பிடித்த சிலர் நீதிமன்றத்தை அணுகலாம். எங்கள் மாணவர்கள் சிலருக்கு எதிர்ப்பு என நாடகம் நடத்தலாம். இவற்றையெல்லாம் தமிழக மக்கள் முறியடிக்க வேண்டும் எனக் கோருகிறோம். கடந்த காலத்தில் நாமெல்லாம் கோயில் சென்று சாமி கும்பிட்டாலே தீட்டு என்று தடுத்தவர்கள் இவர்கள் என்பதைத் தமிழக மக்கள் கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்.

மேலும் அர்ச்சகர் பயிற்சி பெற்ற பல மாணவர்கள் வயது தடை காரணமாகப் பணிக்கு விண்ணப்பிக்க முடியாமல் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வயது வரம்பைத் தளர்த்தி பணி நியமனம் தமிழக அரசு படிப்படியாக வழங்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அது போல் மூடப்பட்ட அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை மீண்டும் திறக்க வேண்டும், அடுத்த நியமனங்கள் மதுரை மீனாட்சியம்மன், திருச்செந்தூர் முருகன், திருவரங்கம் ரங்கநாதன் உள்ளிட்ட பெருங் கோயில்களில் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் தமிழக முதல்வரிடம் அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற மாணவர் சங்கத்தின் சார்பில் வைக்கின்றோம். ●

**Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,**